RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s151

# வரலாறெழுதியல் நோக்கில் நாயக்கர் காலச் சூழல்

ரா. சிலம்பரசன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம்-636011, தமிழ்நாடு, இந்தியா

# Historiographical Context of the Nayak Period

R. Silambarasan [a, *]

[a] Department of Tamil, Periyar University, Salem–636011, Tamil Nadu, India

* Corresponding Author: tamilsilamban8@gmail.com

Received: 05-06-2022
Revised: 20-09-2022
Accepted: 08-10-2022
Published: 09-12-2022

Check for updates

## ABSTRACT

The linguistic, literary, political, social, and cultural contexts of that state greatly contribute to the need to know or write the history of a state from its rise to its fall. Historiography approached in these contexts is not only focused on the rulers but also on understanding the history of the people. This article examines how the linguistic, literary, political, social, and cultural contexts of the time contributed to the historiography of the Nayak period centred on this hypothesis. In this way, the language environment where Tamil and other languages are mixed, the literary environment about changes in literary forms as a result of contact with other languages, the political environment of the Nayaks who supported the Vijayanagar regime and then fell apart due to rivalries and struggles, the social environment about conflicts in society with inequalities and caste structures, and the cultural environment about customs as a result of neighbouring settlements are all intertwined.

**Keywords:** Nayak Period, Vijayanagar Regime, Historiographical Context, Environment

## முன்னுரை

உலக வரலாற்றுத் தரவுகளை உற்றுநோக்குமிடத்து ஓர் அரசியல் அல்லது அரசின் உச்சபட்ச வளர்ச்சி, வீழ்ச்சி அல்லது மாற்றம் என்பன நிருவாக அமைப்புமுறைகளோடு மட்டும் நின்றுவிடுவதில்லை. மாறாக மொழி, இலக்கிய, சமூக மற்றும் பண்பாட்டுக் கூறுகளையும் ஓர் அசைவிற்கு உட்படுத்தக்கூடியனவாகும். ஓர் இனம் எத்தன்மைய மொழியைத் தன் தொடர்பாடலாகக் கொள்ளவேண்டுமென்பதையும், எத்தன்மைய இலக்கிய வகைமைகளை ஆக்கிக்கொள்ளவும் நுகரவும் வேண்டுமென்பதையும், எத்தன்மைய சமூகப் படிநிலைகளைக் கொண்டு விளங்கவேண்டுமென்பதையும், சமயம், விழா உள்ளிட்ட எத்தன்மைய பண்பாட்டு இயங்கியலைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதையும் ஓர் அரசியல்தான் தீர்மானிக்கிறது. இப்போக்குத் தமிழக அரசியலில் வரலாற்றுக் காலங்களிலிருந்து தொன்றுதொட்டு நிகழ்ந்து வந்துள்ளமையைக் காணமுடிகிறது. தமிழக அரசியல் வரலாற்றில் மூவேந்து மரபின் பேரரசுகளுக்குப் பிந்தைய அரசியல் என்பது பிற இனத்தவர் மற்றும் வேற்று நாட்டினர் ஆளுகைக்கு உட்பட்டதாகும். ஒன்றிலிருந்து பிரிந்த அல்லது விலகிய சிறு, குறு அரசியல் குழுக்கள் புதுவிதமான அரசியல் களங்களை உருவாக்கிக்கொண்டன. அவற்றின் ஆதிக்கம் மொழி, இலக்கிய, சமூக மற்றும் பண்பாட்டுக் கூறுகளை மாற்றுவதிலும் ஆக்கிரமிப்பதிலும் முனைந்து நின்றது. இந்நிலையில் மூவேந்தர் அரசியல் மரபைக் கடந்து காலத்தால் பல அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்தன. தமிழகத்தில் பிற்காலப் பாண்டியர், சோழர் என எஞ்சிய பேரரசு மரபினர் குறுகி பல்லவ அரசுகள் எழுச்சிப் பெற்றன. பின்னர் சுல்தானிய பேரரசின்கீழ் தமிழகப் பகுதிகள் சிக்குண்டு கிடந்தன. அதற்குப் பின்னர் விசயநகரப் பேரரசின்கீழ் நாயக்க மன்னர்களின் ஆட்சி கிட்டத்திட்ட

ஆங்கிலப் பேரரசின் உருவாக்கம் வரையிலும் நீடித்தது. முந்தைய அரசுரிமைகளின் மாற்றங்களில் நிகழ்ந்ததைப் போலவே நாயக்கர்கால அரசியலிலும் மொழி, இலக்கிய, சமூக மற்றும் பண்பாட்டுக் கூறுகள் பெரும் அசைவுகளைச் சந்திக்க நேர்ந்தன. அச்சூழல் நாயக்கர்கால வரலாறெழுதியலுக்கு எங்ஙனம் துணைசெய்கிறதென்பது ஆராயப்பட வேண்டியதாகும்.

## வரலாறெழுதியல் நோக்கு

ஓர் இலக்கியத்தின் வரலாற்றை எழுதவேண்டுமென்பதன் நோக்கம் அந்த இலக்கியத்தைப் பற்றியது மட்டுமல்ல, அந்த இலக்கியத்தின் வழியிலான வரலாற்றையும் அறிந்துகொள்வதாகும். ஓர் இலக்கியத்தின் வரலாறு என்பது அவ்விலக்கியத்தின் உள்ளடக்கம், பாடுபொருள் முதலான அக உருவாக்கம் பற்றியதாகும். மேலும் அது குறிப்பிட்ட இலக்கியத்தின் தோற்றம், வளர்ச்சிப் படிநிலைகளை விவரிக்கக்கூடியதாகும். ஆனால், இலக்கியத்தின் வழி வரலாறு என்பது அவ்விலக்கியம் குறித்த அரசியல், சமூக மற்றும் பண்பாடு முதலான புற உருவாக்கம் பற்றியதாகும். இவ்வாறான வரலாறெழுதியலில் மேற்கண்ட இலக்கியத்தின் வரலாறும் அடங்கிவிடும். தனித்து அவை விளக்கப்படவேண்டியதில்லை. "இலக்கியம் வழியாக வரலாற்றை அறிந்துகொள்ளும் முயற்சியை இலக்கிய வரலாறு என்றே கூறல் வேண்டும். இவ்வாறு நோக்கும்பொழுது இலக்கியத்தின் வரலாறு என்பதும், இலக்கிய வழி வரலாறு (அல்லது இலக்கிய நிலைப்பட்ட வரலாறு) என்பதும் ஒன்றிலிருந்து மற்றது வேறானது என்னும் உண்மை தெளிவாகும். ஒரு சமூகத்தின் மதம் பற்றியோ அல்லது விளையாட்டுகள் பற்றியோ படிப்பது போன்று அந்தச் சமூகத்தின் இலக்கியத்தைப் பற்றிப் படித்துக் கொள்ளலாம். அதாவது குறிப்பிட்ட அந்த இலக்கியம் எவ்வாறு தோன்றியது, எவ்வாறு வளர்ச்சியடைந்தது, அவ்விலக்கிய வளர்ச்சியில் இடம்பெறும் இலக்கிய வடிவங்களின் தோற்றம், வளர்ச்சி, தேய்வு எவ்வாறு அமைந்தன என்பன பற்றி இலக்கியத்தின் வரலாற்றிலேயே அறிந்துகொள்ளலாம். ஆனால், இத்தகைய ஒரு வரலாறு, ஒரு நாட்டின் வரலாற்றை அதன் இலக்கியங்கொண்டு அறியும் வரலாற்று முறைமையிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும்" என்பதன்வழி இலக்கிய வரலாறெழுதியலின் நோக்கத்தைப் புரிந்துகொள்ளமுடிகிறது (Karthikesu Sivathambi, 2010).

## நாயக்கர்கால வரலாற்றுச் சுருக்கம்

சிற்றரசு, பேரரசுகளாகப் பரவிக்கிடந்த இந்தியத் துணைக்கண்டம் பெரும்பான்மையும் அயலகப் படையெடுப்பினால் சுல்தானியர்களிடம் சிக்குண்டு கிடந்தது. தென்னிந்தியாவைப் பொருத்தவரை தக்காணப் பகுதிகளை அவர்கள் தங்கள் வசம் வைத்திருந்தனர். பாண்டிய நாட்டின் உள்நாட்டுப்போரைப் பயன்படுத்திக்கொண்ட அலாவுதீன் கில்ஜியின் படைத்தலைவனான மாலிக் கபூர் பாண்டிய நாட்டைச் சூறையாடினான். "அரசுரிமைப் போராட்டங்களாலும், மாலிக் கபூரின் அட்டூழியங்களினாலும் பாண்டியநாடு சீர்குலைந்து போயிற்று" (Rasaram et al, 2014). கி.பி.1340களில் ஜலாலுதீன் ஹசன்ஷா மதுரையை ஆட்சிப்புரிந்து வந்தான். அவனுக்குப்பின் அலாவுதீன் உதாஜி மதுரையின் சுல்தான் ஆனான். அக்காலக்கட்டத்தில் சுல்தான்களின் ஆட்சி நிருவாகத்தால் எண்ணிலடங்காத அட்டூழியங்கள் நிகழ்ந்தன. ஏற்கனவே இந்து சமயத்திலிருந்து இசுலாமைத் தழுவியிருந்த அரிகரன் மற்றும் புக்கர் ஆகிய இரு சகோதரர்களும் மீண்டும் இந்து சமயத்திற்குமாறி சுல்தானியர்களின் ஆட்சிக்கு முடிவுகட்ட விசயநகரப் பேரரசை அமைத்தனர். "முதலாம் புக்கன் (கி.பி.1344-77) விசயநகரப் பேரரசனாக முடிசூட்டிக்கொண்ட பிறகு மேற்கண்ட பல ஆக்கப்பணிகளுள் மதுரையைச் சுல்தானியர்களின் பிடியிலிருந்து விடுவித்தது மிகச்சிறந்ததொன்றாகும்" (Pillai, 2009). இதற்கான பெரும்பங்களிப்பு முதலாம் புக்கனின் மகனான குமார கம்பணனைச் சாரும். "இவனது வெற்றி இவனது மனைவி கங்காதேவி எழுதிய மதுரை விஜயம் என்னும் சமஸ்கிருத நூலில் குறிப்பிடப்படுகிறது. இப்போரின் மூலம் தமிழகத்தில் விசயநகரப் பேரரசு நிலைகொள்ள ஆரம்பித்தது" (Rasaram et al, 2014).

தமிழகத்தை அந்நியப் படையெடுப்புகளிலிருந்து காக்கும் அரணாக விசயநகரப் பேரரசு செயல்பட்டு வந்தமையை, "விசயநகரப் பேரரசு சிறிது காலம் வடநாட்டு மன்னரின்

தாக்குதல்களிலிருந்து தென்னிந்தியாவுக்குப் பாதுகாப்பளித்து வந்தது" என்பதன்வழி அறிந்துகொள்ளலாம் (Pillai, 2009). "விசயநகர அரசு ஏற்பட்டதும் தமிழகம் அதன் பகுதியாக்கப்பட்டது. விசயநகரத்தினுடைய நிர்வாக அமைப்பின்வழி தமிழகத்தில் நாயக்கர் ஆட்சி தோன்றியது. விசயநகரத்தில் ஏற்பட்ட ஓயா அரசுரிமைப் போட்டி நாயக்கர்களின் சுயாட்சிக்குத் துணை புரிந்தது" (Chellam, 2017). இப்படியாகச் சுயாட்சிக்கு எழுச்சி செய்த நாயக்கர்களின்மீது போர்தொடுத்த கிருட்டிணதேவராயர் நாயக்கர்களின் நிருவாகப் பொறுப்புகளை மாற்றியமைத்தார். இருப்பினும் இடையிடையே நாயக்கர்கள் அரசுரிமைக்காகக் கிளர்ந்து கொண்டிருந்தனர். கி.பி.1565 ஆம் ஆண்டில் நடைபெற்ற தலைக்கோட்டைப் போர் விசயநகர வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்ட சில நாயக்க மன்னர்கள் தனித்தனியாக முடிசூட்டிக்கொண்டனர். "தலைக்கோட்டைப் போரைத் தொடர்ந்து நேரிட்ட பெருங்குழப்பத்தின்போது தமிழகத்தில் மதுரையிலும், தஞ்சாவூரிலும், செஞ்சியிலும் விசயநகரப் பேரரசின் சார்பில் அரசு புரிந்துவந்த நாயக்கர்கள் தனித்தனித் தத்தம் நாட்டு மன்னர்களாக முடிசூட்டிக்கொண்டனர். ஆயினும், வேலூர் நாயக்கர்களும், மைசூர் உடையார்களும் தொடர்ந்து விசயநகரத்து மன்னரின் தலைமையை ஏற்று வந்தனர்" (Pillai, 2009). இவ்வாறு விசயநகரப் பேரரசின் ஓர் அங்கமாகச் செயல்பட்டுவந்த தமிழக நாயக்கர் மன்னர்கள் அரசு நிருவாகப் பணிகளில் திறம்பட செயல்பட்டு வந்தனர். சுல்தான்கள் மற்றும் ஐரோப்பியர்களின் அடக்குமுறையிலிருந்து தமிழகத்தைக் காத்துவந்த நாயக்கர்கள் பின்னர் மராட்டியர்களிடமும், கருநாடக நாவாப்புகளிடமும் தங்கள் ஆட்சிப் பகுதிகளை இழந்தனர்.

## நாயக்கர்கால மொழிச் சூழலமைவு

நாயக்கர்காலச் சமூகச் சூழலில் தமிழ்மொழியின் வளர்ச்சி பெரிதும் பாதித்தது. குறிப்பாக வேற்றுநாட்டவரின் குடியேற்றங்களால் மொழிக்கலப்பிற்கு வழிவகுத்தது நாயக்கர் காலம். அயல்நாட்டு வாணிபம் முதலான தொழில், வர்த்தகப் பரிமாற்றங்களுக்கு மொழி இன்றியமையாத தேவையாகின்றது என்பதால் தமிழோடு எளிதில் பிறமொழிகள் கலந்துவிட்டன. விசயநகர ஆட்சிக் காலத்திலேயே கன்னடமும் தெலுங்கும் தமிழோடு மிக நெருக்கம்கொண்டு மொழிக்கலப்பிற்குக் காரணமாயின. இன்னும் குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால் பிறமொழிகளைக் காட்டிலும் தெலுங்கு மொழியே நாயக்கர் காலத்தில் முதன்மைப்பெற்றிருந்தது. நாயக்கர்களை அடையாளப்படுத்துமிடத்து, "தெலுங்கு மொழிக்காரரான நாயக்கப் பிரதானிகளின் ஆட்சிக் காலம்" என்று குறிப்பிடுகிறார் (Karthikesu Sivathambi, 2010). "அக்கடா, அட்டி, தீவட்டி, ஜாடி, கபோதி, கடப்பாரை, ரவிக்கை, ரேக்கு, ஒயில், கந்தை, சிட்டிகை, வாணலி, தடவை, ஜாஸ்தி என இன்று பேச்சுத் தமிழில் சாதாரணமாக வழங்கும் சொற்கள் தெலுங்கு மொழிச் சொற்களாகும். இதைப் போலவே அட்டிகை, எகத்தாளம், சொத்து, பட்டாக்கத்தி, குலுக்கு, கெம்பு போன்ற சொற்களும் கன்னடத்திலிருந்து தமிழுக்கு வந்த வரவாகும். முஸ்லிம்களின் வரவால் அக்கப்போர், அசல், ஆசாமி, அவினி, ராத்தல், ஊதுபத்தி, உருமால், கிராம்பு, தாக்கீது, இமாம், இலாக்கா, தபா, சைத்தான், முன்ஷி, லாயக்கு, ரத்து, ஜப்தி, ஜாமீன், மகசூல், ஜில்லா போன்ற அரேபியச் சொற்களும் தமிழில் கலந்தன" (Rasaram et al, 2014).

"மதுரை நாயக்கர்கள் தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டவர்களாவர். பாளையக்காரர்களும் பலர் தெலுங்கர் அல்லது கருநாடகக்காரர்களாகவிருந்தனர். இவர்களுக்கு முன் ஆட்சி துவக்கி வைத்த இராயர்கள் தெலுங்கு இலக்கியத்துக்கும், சமஸ்கிருத மொழிக்கும், கல்விக்கும் ஆதரவளித்தவர்களாவர்" (Chellam, 2017). சமஸ்கிருதம் பெரும்வழக்கிருந்த காலம் இது. "தமிழ் இலக்கியங்களை எழுதிய ஆரியரைவிட, அதற்கு உரை எழுதிய ஆரியர்களே பெருமளவில் உள்ளனர். இவ்விலக்கியங்களில் தங்களது கருத்துக்களைத் துணிந்து கூற அச்சப்பட்ட ஆரியர், தமிழர் எழுதிய நூல்களுக்கு விளக்கவுரை கொடுத்து, தங்கள் கொள்கைகளையும் திணித்து, தமிழர்களே ஆரியக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டிருந்தனர் என்று தமிழர்களையே நம்ப வைத்தனர். இதற்கு எடுத்துக்காட்டு, திருக்குறளுக்குப் பரிமேலழகர் எழுதிய உரையாகும்" என்பதன் மூலம் மொழிவழியிலான கருத்தியல் ஊடுருவல்களை அறியமுடிகிறது (Victor, 2007).

சமயச் சடங்குகள் மற்றும் பழக்க வழக்கங்களாலும், சமூக உறவுகளின் இணைப்பினாலும் கிளை மொழிகள் பல உருவாயின எனக் குறிப்பிடும் சு. இராசாராம், "இக்காலக்கட்டத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களையும் ஏராளமாக எழுதப்பட்ட செப்புப் பட்டயங்களையும் (இக்காலக்கட்டத்தில் மட்டுமே கிட்டத்தட்ட 500 செப்புப் பட்டயங்கள் எழுதப்பட்டுள்ளன) மொழி ஆய்வுக்கு உட்படுத்தி பார்ப்போமேயானால் இக்கிளைமொழிகளின் வேர்களைக் காணவியலும். வரலாற்று நோக்கில் இடைக்காலத் தமிழரின் குறிப்பாக நாயக்கர்காலத் தமிழ்ச் சமூகத்தின் கிளைமொழிகளை ஆராயும் முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்" என்கிறார் (Rasaram et al, 2014).

நாயக்கர் காலத்தில் தமிழ்ப்பணியாற்றிய வீரமாமுனிவரின் (கி.பி.1680-1747) கொடுந்தமிழ் இலக்கணத்தை வட்டாரக் கிளைமொழிகளுக்கான இலக்கணமாகக் கொள்ளலாம். நாயக்கர் காலம் நிறைவு பகுதியை எட்டுகிற காலத்தில் வீரமாமுனிவர் இப்படியானதொரு இலக்கண நூலை எழுதுவதற்கு அக்காலத்தில் நிலவிய மக்கள் மொழிவழக்கே காரணமாக இருத்தல் கூடும். மேலும், இலக்கண விளக்கம், இலக்கண விளக்கச் சூறாவளி, பிரயோக விவேகம், இலக்கணக் கொத்து, தொன்னூல் விளக்கம், பாட்டியல் முதலான இலக்கண நூல்கள் பல உருவாகியிருந்தாலும் அவை பிறமொழி கலப்புடைய அக்கால நடைமுறைத் தமிழுக்குரியதாகவே இருந்தன. ஆயினும், இந்நூலாசிரியர்களின் தமிழ்க்காப்புப் பணி பாராட்டிற்குரியது.

மொழியியல் அடிப்படையில் நாயக்கர்காலத் தமிழை ஆய்வோமானால், பழந்தமிழ் வழக்கிலிருந்து பல மாற்றங்கள் பெற்றுள்ளதை அறியலாம். ஒலியனியல், உருபனியல், தொடரியல் வடிவமைப்புகளில் அம்மாற்றங்கள் நிலவின. ஆயினும், முந்தைய பல்லவர், சோழர் காலத் தமிழோடு ஒப்பிடுகையில் பெரும்பாலும் அவ்வாறே வழக்கிருந்ததே தவிர தனித்த கவனம் பெறத்தக்க வகையிலான மாற்றங்கள் இல்லை என்பதன்மூலம் அறியப்படுவதாவது பல்லவர், சோழர் காலத்திலேயே தமிழ் பல மாற்றங்களைப் பெற்றுவிட்டது என்பதுதான். நாயக்கர் காலத்தை அதன் தொடர்ச்சி எனலாம். இவ்வாறு பிறமொழிகளோடு சிக்குண்டு கிடந்த தமிழ் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் புத்தெழுச்சிப் பெற்றுள்ளமையை, "பதினேழாம் நூற்றாண்டிறுதியில் நிலைபெற்ற கொள்கை பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் குன்றி, வடமொழியும் தமிழும் வெவ்வேறே யென்ற கொள்கை இருமொழியும் நிலைகண்ட ஆசிரியர் சிவஞான முனிவரால் நாட்டப்பட்டது" என்பதன் வழி அறியலாம் (Subramaniya Pillai, 2009).

## நாயக்கர்கால இலக்கியச் சூழலமைவு

பழந்தமிழ் இலக்கிய வடிவங்களோடு ஒப்புநோக்கி பார்க்கும் அளவிற்கான பெரும் இலக்கிய வடிவங்களை நாயக்கர் காலத்தில் காணவியலாது. ஆயினும், தம் அளவிலான இலக்கியப் பணிகளைத் தமிழுக்குச் செய்ய தவறவுமில்லை. இந்நிலையில் பழைய இலக்கிய, இலக்கண வகைமைகளின் தொடர்ச்சிநிலை அறுபட்டமைக்கான காரணத்தை பின்வருமாறு விளக்குகிறார் (Arunachalam, 2005). "மிகப் பலவான நூல்கள், இலக்கியங்களும் இலக்கணங்களும் உரையும் 12-13 நூற்றாண்டுகள் வரையில் நிலவியிருந்து, 14ஆம் நூற்றாண்டில் அடியோடு மறைந்து போய்விட்டன. இதற்குக் காரணம் மிகவும் தெளிவாக விளங்குகிறது" என அந்நியப் படையெடுப்புகளைக் காரணங்களாகக் காட்டுகிறார் (Arunachalam, 2005). மேலும், அந்நியப் படையெடுப்புகள் கோயில்களையும் கலைகளையும் அழித்தன என்கிறார். "புத்தகங்களைக் கொளுத்துதல் வெறிகொண்ட அன்னியர்களுடைய நாசவேலைகளில் ஒன்று" எனச் சாடுகிறார் (Arunachalam, 2005). இத்தகைய அரசியல் சூழலில் நாயக்கர் காலம் இலக்கிய வெறுமையுற்றுக் கிடப்பதில் வியப்பில்லை.

நாயக்கர்கால மன்னர்கள் தத்தம் ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்வதில் மட்டுமே தங்கள் காலத்தைக் கடந்தமையால், "நாயக்கர் கால அரசியல் சூழல் தமிழில் சிறந்த இலக்கியங்கள் உருவாகச் சாதகமாக அமையவில்லை" என்கிறார் (Rasaram et al, 2014). ஆயினும், "அமைதியற்ற அரசியல் சூழ்நிலை நாட்டில் இருந்தபோதிலும், இலக்கியப் படைப்பு இடையறாமல் நடைபெற்றுவந்ததாகவே தோன்றுகிறது" என்கிறார் (Varadharasan, 2008).

நாயக்கர்களால் சைவ, வைணவ சமயங்கள் போற்றப்பட்டமையால் சமயம் சார்ந்த புராணங்கள் பலவும் இயற்றப்பட்டன. "பதினான்காவது, பதினைந்தாவது நூற்றாண்டுகளிலே வைணவ ஆசிரியன்மார் நாலாயிரப் பிரபந்தத்திற்கு விரிந்த உரைகளை வடமொழி மிகுதியும் தென்மொழி சிறிதுங் கலந்த மணிப்பிரவாள நடையில் இயற்றின காலந்தொட்டுத் தமிழிலே வடசொற்கள் பெருவெள்ளமாகப் பரவலாயின" என்பதிலிருந்து அக்காலச் சமய நூல்கள் சமஸ்கிருத சார்புடையன என்பதை அறியலாம் (Subramaniya Pillai, 2009). அருணகிரிநாதர் திருப்புகழைப்பாடி புகழ் பெற்றதும் இக்காலத்தில்தான். கச்சியப்ப சிவாச்சாரியார், காளமேகம் ஆகியோர் சிறந்த புலவர்களாக விளங்கினர். வீரகவிராயர் அரிச்சந்திர புராணத்தையும், ஞானப்பிரகாசர் திருவொற்றியூர் புராணத்தையும், அதிவீரராம பாண்டியன் நளனின் துன்பியல் வரலாற்றையும் படைத்தனர். "நாயக்கர் ஆட்சியின் துவக்கக் கட்டத்தில் சூரியனார் மடத்தின் தலைவராகவிருந்த சிவாக்கிர யோகிகள் சிவஞான போதத்துக்கும், சிவஞான சித்தியாருக்கும் உரை நூல்களைப் படைத்தார்" (Chellam, 2017). கி.பி.17 ஆம் நூற்றாண்டு திருமலை நாயக்கர் காலத்தில் எல்லப்ப நாவலரால் அருணாசலப் புராணமும், அருணைக்கலம்பகமும் படைக்கப்பட்டன. இரத்தினக்கவிராயர் மச்ச புராணமும், புலவர் ஆற்றுப்படையும் படைத்துள்ளார்.

நாயக்கர் காலமாகக் கருதத்தகும் கி.பி.13 முதல் கி.பி.18 ஆம் நூற்றாண்டு வரையிலான காலக்கட்டத்தைத் தமிழ் இலக்கிய வரலாறுகள் சிற்றிலக்கியக் காலம் என்றே வரையறுத்துள்ளன. "இரட்டையர் காலம் முதல் சைவக் கிளர்ச்சி ஏற்பட்டுச் சமணர் வலிகுன்றியது. உலா, கலம்பக முதலிய சிறுகாப்பியங்களியற்றப்பட்டன. வண்ணப்பாட்டு வகைகள் மிகுந்தன" வில்லிப்புத்தூராரின் சம காலத்தவர்களாக இரட்டைப் புலவர்கள் கருதப்படுகிறார்கள் (Subramaniya Pillai, 2009). அவர்கள் இருவரும் இணைந்து பல சிற்றிலக்கிய வகைமைகளைப் பாடியுள்ளனர். "இவர்களுடைய பாடல்களில் நகைச்சுவையும் பொருள் நயமும் ததும்பி வழியும். இருவாமாத்தூர்க் கலம்பகம், தில்லைக் கலம்பகம், ஏகாம்பரநாதர் உலா, ஏகாம்பரநாதர் வண்ணம், மூவர் அம்மானை, கச்சிக் கலம்பகம், கச்சியுலா ஆகிய பிரபந்தங்களையும், தனிப் பாடல்களையும் இவர்கள் பாடியுள்ளனர்" (Pillai, 2009). "நாயக்கர் காலத்தில் வாழ்ந்தவர்களுள் முத்துத்தாண்டவர், அமிர்த கவிராயர், சர்க்கரைப் புலவர் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். அமிர்த கவிராயர் இராமநாதபுரம் சேதுபதியின் ஆதரவைப் பெற்றவராவார்" (Chellam, 2017). நாயக்கர் காலத்தில்தான் பாட்டியல் நூல்கள் பல இயற்றப்பட்டன. அவை அக்கால இலக்கிய வகைமையான சிற்றிலக்கியங்களுக்கு இலக்கணங்களை இயம்பின. "முதன்முதலில் பன்னிரு பாட்டியலே சிற்றிலக்கியங்களுக்கு இலக்கணம் வகுத்தது எனலாம்" (Sethuraman, 2017). "16ஆம் நூற்றாண்டில் தோன்றியவை பிரபந்த மரபியல், சிதம்பரப் பாட்டியல் என்ற இரண்டு. இவற்றோடு பாப்பாவினம் என்பதும் இங்கு சேர்த்துச் சொல்லத்தக்கது" (Arunachalam, 2005).

வியாச முனிவரின் பாரதக் கதையைத் தழுவி அக்கதையைப் பலர் தமிழில் எழுதியதாகக் கல்வெட்டுக் குறிப்புகள் சுட்டுகின்றன. இக்காலத்தில் வில்லிப்புத்தூரார் எழுதிய பாரதம் சிறந்த இலக்கியமாகும். "வில்லிப்புத்தூரர் காலம் முதல் தமிழ்ப் பெருங்காப்பிய உணர்வு குன்றத் தொடங்கிற்று. சொன்னய முணர்த்துங் கற்பனைகள் மிகுந்தன" என்கிறார் (Subramaniya Pillai, 2009).

இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், இலக்கண விளக்கச் சூறாவளி, முத்து வீரியம், பிரபந்த தீபிகை, நேமிநாதம், பிரபந்த மரபியல், இலக்கணக்கொத்து, மாறனலங்காரம், மாறனகப்பொருள் முதலிய இலக்கண நூல்கள் இக்காலக்கட்டத்தில் இயற்றப்பட்டன. இவ்வாறு, "பிந்தைய நூற்றாண்டுகளில் வரும் இலக்கண நூல்கள், பொதுவாகப் பிற நாடுகளின் தொடர்பும், பிற மதங்கள், மக்களின் தொடர்பும் ஏற்பட்ட பின்னரே அத்தொடர்பின் விளைவாய் எழுந்தன" என்று அறியப்படுகிறது (Arunachalam, 2005).

இலக்கண உரைகள் என்று காணுமிடத்துத் தொல்காப்பியத்திற்கு நச்சினார்க்கினியர், சேனாவரையர், தெய்வச்சிலையார், கல்லாடனார், பேராசிரியர் ஆகியோரது உரைகள் இக்காலத்தில் எழுதப்பட்டுள்ளதாக அறிகிறோம். "தொல்காப்பிய உரையாசிரியர் காலம் 12 முதல் 14 ஆவது நூற்றாண்டு வரையாமென்று கருதலாம்" என்கிறார் (Subramaniya Pillai, 2009). இவர், இளம்பூரணர் காலத்தைக் கி.பி.11-12 எனவும், சேனாவரையர் காலத்தைக் கி.பி.12 எனவும், பேராசிரியர் காலத்தை ஒட்டக்கூத்தரின் சமகாலத்தவர் எனவும் குறிப்பிடுகிறார் (Subramaniya Pillai, 2009). நன்னூலுக்கு மயிலைநாதர், சங்கர நமச்சிவாயர், ஆண்டிப்புலவர், சிவஞான முனிவர் ஆகியோர் உரைகளும்

கிடைக்கப்பெற்றுள்ளன. திருக்குறளுக்கு உரைகண்ட பரிமேலழகர் கி.பி.14ஆம் நூற்றாண்டினராகக் கருதப்படுகிறார்.

இக்காலக்கட்டத்தில்தான் "நிகண்டு பற்றிய கருத்துருவாக்கமும் செம்மையடைந்தது என்று கூறலாம்" (Rasaram et al, 2014). சூடாமணி நிகண்டு இக்காலத்தில்தான் உருவானது. கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் சிதம்பர இரேவண சித்தரால் அகராதி நிகண்டு இயற்றப்பட்டது. தமிழிலக்கிய வரலாற்றில் சித்தர் இலக்கியம் என ஒரு வகைமை ஆக்கப்படுவதற்குக் காரணமாகவிருக்கும் சித்தர் பாடல்களும் இக்காலத்தில்தான் பல்கிப் பெருகின. "இந்தக் காலத்தில் சித்தர்கள் என்ற பெயரால் ஞானிகள் சிலர் தோன்றித் தம் அனுபவ உணர்வுகளை எளிய தமிழால் பாடினார்கள்" (வரதராசன் மு., 2008). சைவக் கொள்கைச் சார்பும், கடவுள் மறுப்பும் கொண்டிலங்கிய சித்தர் பாடல்கள் மறைபொருள் பண்புடன் பொதுவெளியில் புரியப்படாதனவாகவும் அறியப்படாதனவாகவும் இருந்தன.

## நாயக்கர்கால அரசியல் சூழலமைவு

நாயக்கர்கள் தங்கள் ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வதில் கவனம் செலுத்தினர். சுல்தான்கள் மற்றும் கருநாடக நாவாப்புகளிடமிருந்து தங்கள் நிலப்பகுதிகளையும் செல்வத்தையும் காப்பதே அன்றைய அவர்களது அரசியல் சூழலாக இருந்தது. "கர்நாடக நாவாபு தமிழ்நாட்டின் வடப்பகுதியைக் கைப்பற்றி ஆளத்தொடங்கினான். போராட்டங்களும் போர்களும் நடந்தன. நாட்டில் அமைதியான சூழல் நிலவ முடியவில்லை" (Varadharasan, 2008).

பாலாற்றிற்கும் கொள்ளிடத்திற்கும் இடைப்பட்ட பகுதிகளைச் செஞ்சி நாயக்கர்கள் ஆட்சி செய்தனர். தஞ்சை நாயக்கர்கள் தஞ்சை மற்றும் வட ஆற்காடு மாவட்டப் பகுதிகளை உள்ளடக்கிய சோழ மண்டலத்தை ஆண்டனர். மதுரை நாயக்கர்கள் மதுரை சுற்றுவட்டார மாவட்டப் பகுதிகளை உள்ளடக்கிய பாண்டிய மண்டலத்தை ஆட்சி செய்தனர். வேலூர் சுற்றுவட்டாரப் பகுதிகளை வேலூர் நாயக்கர்கள் ஆண்டுவந்தனர்.

வேலூரை ஆண்டுகொண்டிருந்த சின்னபொம்ம நாயக்கன் வேலூர் கோட்டையையும், அதனுள் சலகண்டேசுவரர் கோயிலையும் கட்டினான். செஞ்சியை ஆண்ட கிருட்டிணப்ப நாயக்கன் சிதம்பரம் திருச்சித்திரக்கூடத்திற்குப் பல திருப்பணிகளைச் செய்தான். ஆனால் இவனது திருப்பணிகளைத் தில்லைச் தீட்சிதர்கள் கடுமையாக எதிர்த்தனர். தஞ்சையில் ஆட்சியில் அமர்ந்த செல்லப்பன் தன்நாட்டு மக்களுக்குப் பாசன வசதிகளைச் செய்துகொடுத்தான். நாகப்பட்டினத்தில் போர்ச்சுகீசியர்கள் தங்கள் குடியேற்றங்களை அமைத்துக்கொள்ள உதவினான். மதுரையை ஆண்டுகொண்டிருந்த விசுவநாத நாயக்கன்தான் தனது நாட்டை முதன்முதலாகப் பாளையங்களாகப் பிரித்தான். "மதுரை நாயக்கர்கள் தங்கள் பகுதியை 72 பாளையங்களாகப் பிரித்தனர். நாயக்கரும் பாளையக்காரரும் தனித்தனி நிர்வாகத்தை நடத்தினர். எனினும் பாளையக்காரர் நாயக்கருக்குக் கீழும், நாயக்கர்கள் விஜயநகர ஆட்சிக்குக் கீழும் செயல்பட்டனர்" (Sethuraman, 2017). பாளையக்காரர்களுக்குப் பரம்பரைவுரிமை வழங்கப்பட்டதோடு நிர்வாகமும் வரையறுக்கப்பட்டது. "17ஆம் நூற்றாண்டில் இந்தப் பாளையக்காரர்கள் தங்களுடைய அதிகாரத்தைப் பெருக்கினர் சர்க்கார் கிராமங்களைப் பாளையக்காரர்களின் கிராமங்களாக மாற்றினர் பாளையங்களின் முழு நிர்வாகிகளாகப் பாளையக்காரர்கள் விளங்கி வலிமை பெற்றனர்" (Chellam, 2017).

நாயக்க மன்னர்களிடம் சமயப்பொறை வெளிப்படையாகவே விளங்கியது. செஞ்சி கிருட்டிணன நாயக்கன், "கிருட்டிணப்பட்டினம் என்று ஊர் ஒன்றை அமைத்து அதில் ஜெசூட் பாதிரிகள் மாதாக்கோயில்கள் கட்டிக்கொள்ள உரிமை வழங்கினான்" என்ற செய்தி அறியப்படுகிறது (Pillai, 2009). இதேபோல், மதுரை முதலாம் வீரப்ப நாயக்கன் "ஆட்சியின்போது மதுரையில் ஜெசூட் பாதிரிகள் கிறித்தவ நிறுவனம் ஒன்றை அமைத்தார்கள். இந்நிறுவனத்தைச் சார்ந்த பாதிரிகளுள் ராபர்ட்-டி-நொபிலி என்பார் சிறந்து விளங்கினார்" என்ற குறிப்பும் அறியப்படுகிறது (Pillai, 2009). தஞ்சை செல்லப்பன் "முஸ்லிம் தர்க்காக்களுக்கு நிவந்தங்கள் வழங்கினான்" என்பதன் வழி நாயக்க மன்னர்களின் சமயப்பொறை புலனாகிறது (Pillai, 2009).

நாயக்கர் காலத்தில் முதல் மைசூர் போர் (1625), திருவிதாங்கூர் படையெடுப்பு (1634-1635), இரண்டாம் மைசூர் போர் அல்லது மூக்கறுப்புப் போர் (1636), திருவிதாங்கூர் போர் (1697), தஞ்சைப் போர் (1700) முதலியன குறிப்பிடத்தகுந்த போர்களாகும் (Ramasamy, 2009). நாயக்கர்களும் சில கொள்கைகளுக்காகத் தங்களுக்குள் போரிட்டுக்கொண்டனர். மதுரை திருமலை பிற நாயக்கர்களை எதிர்க்க கோல்கொண்டா சுல்தானின் துணையை நாடியதாக வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன (Chellam, 2017). "நாயக்கர்கள் காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை முதலியன வைத்திருந்தனர் பீரங்கிப் படையும் அவர்களிடம் இருந்தது. எனினும் போர்க்கலையில் திறமைப்பெற்று விளங்கினார்கள் எனக் கூறமுடியாது" (Ramasamy, 2009).

டச்சுக்காரர்களுக்கும், போர்ச்சுக்கீசியர்களுக்கும் இடையே போட்டி நிலவிய காலம். திருமலையின் நட்பைப் போர்ச்சுக்கீசியர்கள் பெற்றிருந்தனர். இதனால் டச்சுக்காரர்கள் அகற்றப்பட்டனர். ஆத்திரமடைந்த டச்சுக்காரர்கள் திருச்செந்தூர் கோயிலைத் தாக்கியும், தூத்துக்குடி பரதவர்களைத் துன்புறுத்தியும் வந்தனர். பிறநாட்டு வணிக நிறுவனங்கள் தங்கள் குடியேற்றங்களை அமைத்துக்கொள்வதற்கும், பாளையக்காரர்கள் சுதந்திரமாக ஆட்சி புரிவதற்கும் நாயக்கர்கால அரசியல் சூழல் சாதகமாக இருந்தது. நாயக்கர்களுக்கு இடையேயான கொள்கை ரீதியிலான போர்களும், அவர்களுக்குள் நிகழ்ந்த வாரிசுரிமைப் போட்டிகளும் குறிப்பிடத்தக்கன. மேலும், கருநாடக நாவாப்புகள், சுல்தான்கள் மற்றும் மராட்டியர்களின் படையெடுப்புகளுக்கும், ஐரோப்பியர்களின் சமயப் பிரச்சாரங்களுக்கும் நாயக்கர்கால அரசியல் சூழல் வழிவகுத்தது எனலாம்.

## நாயக்கர்காலச் சமூகச் சூழலமைவு

நாயக்கர்காலச் சமூகத்தில் பிராமணர்கள் அரசர்களின் பேராதரவைப் பெற்றிருந்தனர். "சோழப் பேரரசர்களைப் போலவே விசயநகரப் பேரரசரும், நாயக்கர்களும் பிராமணர்களுக்குப் பேராதரவு தந்துவந்தனர்" (Pillai, 2009). "பிராமணர்களின் செல்வாக்கு உயர்ந்திருந்தது. குறிப்பாக, விசயநகர மன்னர்கள் தம் அரசியல் நிர்வாகத்தில் இவர்களுக்கு முக்கியத்துவம் அளித்திருந்தனர். வலங்கை-இடங்கைப் பிரிவினர், சாதி அடிப்படையில் உயர்ந்தோர் தாழ்ந்தோர், இவரது சமயம் சார்ந்த ஒழுகலாறுகள் மற்றும் வியப்பூட்டும் பழக்க வழக்கங்களும் சடங்குகளும் ஆகிய இன்னோரன்ன வேறுபாடுகளின் காரணமாகச் சமூகக் கிளைமொழிகள் இக்காலக்கட்டத்தில் பெருமளவில் தோன்றியிருக்க வேண்டும்" (Rasaram et al, 2014).

கி.பி.13 முதல் கி.பி.18ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலங்களில் தொழில் மற்றும் பொருளாதார அடிப்படையில் பல சாதியப் பிரிவுகள் உருவாகின. "பொருளாதாரத்தின் அடிப்படையில் குலங்கள் நூற்றுக்கணக்கில் பெருகிவந்தன. சில குழுக்கள் சிறுசிறு வகுப்புகளாகவும் பிரிந்து போனதுண்டு" (Pillai, 2009). இந்த வகுப்பினர்களுக்கிடையே அடிக்கடி சச்சரவுகள் நடந்தேறின. "சமயச் சண்டைகள் மிகுதிப்பட்டன" (Subramaniya Pillai, 2009). "ஒருமுறை மதுரை வீரப்ப நாயக்கன் தலையிட்டு இவர்களுடைய சச்சரவு ஒன்றை தீர்த்து வைத்தான் நல்லுறவு உடன்படிக்கை ஒன்றையும் ஏற்படுத்தினான்" என்கிற குறிப்புகளும் காணப்படுகின்றன (Pillai, 2009). வலங்கை - இடங்கை வகுப்பினர்களுக்கிடையே அவ்வப்போது பூசல்களும் சண்டைகளும் நிலவின. கி.பி.15ஆம் நூற்றாண்டுகளில் நடைபெற்ற சாதிய மோதல்கள் மற்றும் சமாதான உடன்படிக்கைகள் குறித்துத் தெளிவாக விளக்கியுள்ளார் (Dhatchinaamoorthi, 2008).

தேவரடியார்கள் கோயில் பணிகளில் ஈடுபடும் வழக்கமும் இக்காலக்கட்டத்தில் இருந்து வந்தது. "காலமேகத்தின் வாழ்க்கை நிகழ்ச்சிகளில் தலைமையானது தாசிகளுடன் அவர் பெற்ற அனுபவம் ஆகும். இவர்களது இயல்புகள் பற்றி நொண்டி நாடகங்கள், விறலிவிடு தூது, பள்ளு ஆகியவற்றின் மூலம் தெரிய வருகின்றன" (Sethuraman, 2017). பிறதொழில் செய்யும் குலத்தவர்களும் தத்தம் குலத்தொழில்களைச் செய்து வந்தனர். மக்களின் குடிநலமும், வாழ்க்கைத் தரமும் முற்றிலும் உழவுத் தொழிலை அடிப்படையாகக்கொண்டே இருந்தன. சாதியப் பிரிவுகளுக்கு ஏற்றாற்போலத் தெருக்களும் இருந்தன. "பார்ப்பனர்கள் வாழ்ந்த அக்ரகாரங்கள், கைக்கோளர் தெரு, கம்மாளர் தெரு, வேளாளர் தெரு, செட்டி தெரு, பறைச் சேரி முதலியன இருந்தன" (Ramasamy, 2009). குழந்தைத் திருமண முறையும்

வழக்கத்திலிருந்தது. இதனை, "பார்ப்பனர்களிடையே இருந்த குழந்தைப் பருவ மணம், மற்ற இனத்தார்களிடையேயும் பரவியது" என்பதனால் அறியலாம் (Ramasamy, 2009).

"நாயக்கர் காலத்திலும் தர்மசாத்திரம் வகுத்த சமூகநீதி அடிப்படையிலான சமற்கிருதக் கல்வியை ஆலயம் வழியாக அரசு பேணிக்காத்தது. இந்தச் சமூக அடிப்படை விதிமுறைகளிலிருந்து விலகியவர்கள் தண்டிக்கப்பட்டனர். சமற்கிருதம் பயிற்று மொழியாகவும், பிராமணர்கள் ஆசிரியர்களாகவும், பிராமண இளைஞர்கள் மாணவர்களாகவும் விளங்கினர். ஆசிரியர்களுக்கு நில மானியமும், மாணவர்களுக்கு இலவச உண்டியும் உறையுளும் கிட்டின. இதுவும் மானிய நிலம் வழிப்பெற்றதாகும். திருமலை காலத்திலும், சொக்கநாதர் காலத்திலும், தெலுங்கு இலக்கியக் கல்வி நிலையங்களும் உதவி பெற்றன. சைவ மடங்கள் தமிழ்க்கல்வியும், சித்தாந்தக் கல்வியும் வழங்கின. ஏனையோருள் வசதியுடையோர் திண்ணைப் பள்ளிகளை நம்பிக் கல்வி பெற்றனர்" (Chellam, 2017). "மதுரையில் பதினாயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் தங்கியிருந்து படிக்கிறார்கள். இவர்கள் அனைவரும் பார்ப்பனர்கள் என்று இராபர்ட்-டி-நோபிலி தன்னுடைய குறிப்பில் எழுதியுள்ளார்" (Ramasamy, 2009).

பிராமணர்களின் தோற்றம் குறித்து எழுதும், "பிராமணர்கள் மழித்த தலையில் குதிரைவால் போன்ற குடுமியை வைத்திருந்தனர். இடையில் மட்டும் ஆடையுடுத்தியிருந்தனர். திறந்த மார்பில் தெரியும் முப்புரி நூல் பார்ப்பவர்களுக்குப் பளிச்செனப்படும் வகையில் இருந்தது" என்கிறார் (Victor, 2007). தமிழை நன்கு கற்று பல உரைநடை நூல்களைத் தமிழில் எழுதிய ராபர்ட்-டி-நொபிலி என்ற ரோமாபுரிப் பாதிரியாரும், "தலையில் குடுமி வைத்துக்கொண்டார் பூணூல் அணிந்தார்" (Pillai, 2009). மேலும் அவர், "மேலை நாட்டினரைப்போல் மாமிசத்தையும், மதுவையும் தீண்டாமல் ஒரு துறவியைப்போல், ஒரு தமிழ்ப் பார்ப்பனர்போல் வாழத் துவங்கினார்" என்பதன் வழி அச்சமூகத்தில் பார்ப்பனர்களின் மதிப்பு எத்தகையதாக இருந்திருக்க வேண்டுமென்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது (Ramasamy, 2009). சமூகத்தில் உயர்வகுப்பினராகக் கருதக்கூடிய ஒரு சமூகத்தினரின் புறத்தோற்றத்தைத் தானும் பின்பற்றி, ஒரு மதபோதகர் சமயப்பணி ஆற்றுதலென்பது அச்சமூகத்தின் கட்டமைப்புக் குறித்த புரிதலை உண்டாக்குகிறது. இதன் மூலம் அச்சமூகம் பார்ப்பனர்களின் சொற்படியிலிருந்தமையை அறியமுடிகின்றது.

## நாயக்கர்காலப் பண்பாட்டுச் சூழலமைவு

"தமிழர் பண்பாட்டிலும் குறிப்பிடத்தக்க பல மாற்றங்கள் இக்காலத்தில் நிகழ்ந்தன" (Rasaram et al, 2014). "நாயக்கர்கள் இந்து மதக் காவலர்களாக விளங்கினார்கள். பல கோயில்களுக்கு அறப்பணிகளும், திருப்பணிகளும் செய்துள்ளனர். மதுரையை விழாக்கள் நிறைந்த நகரமாக்கியவர்கள் நாயக்கர்கள்தான்" (Ramasamy, 2009). இந்து சமயக் கோயில்கள் பல நாயக்க மன்னர்களால் கட்டப்பட்டு அல்லது திருப்பணிகள் செய்யப்பட்டு வழிபாட்டுத் தளங்களாக இருந்த அதே காலகட்டத்தில் சிறுதெய்வ வழிபாட்டு மரபும் வழக்கிலிருந்தது. இதற்கு, "கிராம தேவதைகளின் கோயில்களில் உயிர்ப்பலி கொடுக்கும் வழக்கமானது பதினைந்தாம் நூற்றாண்டிலேயே இருந்து வந்ததற்குச் சான்று உண்டு" என்ற விளக்கம் தக்க ஆதாரமாகிறது (Pillai, 2009). மேலும், சிறுதெய்வக் கோயில்களில் வரி பெறப்பட்டமையை, "கிராம தேவதையின் கோயிலுக்கெனப் பெற்றது பிடாரிவரி" என்பதன்மூலம் அறிந்து கொள்ளலாம் (Dhatchinaamoorthi, 2008).

இக்காலத்தில் தேவரடியார்களுக்கு விருதுப் பெயர்களும், நிலங்களும், வீடும் வழங்கப்பட்டன. அவர்களது பாதங்களில் சூலக்குறியை அடையாளமாகச் சூடுபோடும் வழக்கமும் இருந்துள்ளதாக அறியமுடிகிறது. நாயக்கர்களைப் போலப் பாளையக்காரர்களும் அரண்மனைகளையும் கோயில்களையும் கட்டினர். கோயில்களில் சிற்ப வேலைப்பாடுகள் இருந்தன. "விசுவநாத நாயக்கன் காலத்தில் ஒவ்வொரு திருமணத்தின்போதும் ஒரு பதக்கு நெல்லும், இரண்டு பணமும் ஆலயத்துக்களிக்க வேண்டிய வழக்கிருந்தது" (Chellam, 2017). "திருமணமுறை இனத்திற்கு இனம் வேறுபட்டது. இருப்பினும் இவ்வைபவத்தில் சில பொதுவான சடங்கு முறைகளுமிருந்தன" (Sethuraman, 2017). "நாயக்கர் ஆட்சிப்பகுதியில் நாயக்க மன்னரே அரசின் தலைவராவார். இவர்கள் பலதார

மணத்தைப் பின்பற்றினர். ஒரு சில நாயக்க மன்னர்களே ஒருதார மணம் புரிந்தனர்" (Sethuraman, 2017). "மூடப்பழக்க வழக்கங்களில் ஈடுபாடு கொண்டிருந்தனர். உடன்கட்டை ஏறும் பழக்க வழக்கத்தைத் தீவிரப்படுத்தினர். மன்னர்களின் மனைவியரும் உடன்கட்டை ஏறினர்" (Sethuraman, 2017).

"சிவன் வழிபாடும், திருமால் வழிபாடும் மிக உயர்ந்த நிலையில் வைக்கப்பட்டன. சிறுதெய்வ வழிபாடும் நாடெங்கும் காணப்பட்டது. கோயில் தொண்டுக்காகவும், வேதம் ஓதிவரவும் பிராமணர்களுக்குத் தொடர்ந்து தானங்கள் வழங்கி வரப்பட்டன" (பிள்ளை கே.கே., 2009). "அக்காலம் தெய்வ பக்தியும் தலயாத்திரையும் மிகுந்திருந்த காலமாதலால், பிரயாணத்தில் நடக்க வேண்டும் என்பது ஒன்று தவிர உணவு முதலிய எல்லாவற்றுக்கும் ஆங்காங்கு உள்ள சைவ மக்கள் நன்முறையில் வசதி செய்திருந்தார்கள்" (Arunachalam, 2005). "நாயக்கர் காலத்திற் சைவ வைணவப் பூசல்கள் காணப்படவில்லை. ஒருமைப்பாடு நிலவி வந்தது. நாயக்க மன்னர்கள் கிறித்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பல நிவந்தங்களை வழங்கினர்" (Pillai, 2009).

நாயக்கர் காலத்தில் அயல்நாட்டு வாணிபம் செழித்து விளங்கவில்லை. கப்பல் படையும், கப்பல்களும் அவர்களிடம் இல்லாமையே இதற்குக் காரணமாகும். "ஆடை அணிகலன்களுக்கு நாயக்கர் மன்னர்களும் மக்களும் பெருஞ்செல்வத்தைச் செலவிட்டனர். மேம்பட்ட துணிகளை நெய்தல் பொருட்டு திருமலை நாயக்கர் மதுரையில் சௌராஷ்டிரர்களைக் குடியமர்த்தினார்" (Sethuraman, 2017). "ஊரில் ஏதேனும் ஒரு வீட்டில் மரணம் நேர்ந்தால் ஈமச்சடங்குகள் செய்வதற்கு அவ்வீட்டில் பெண்கள் இலராயின் வலையர்கள் செய்து வரவேண்டியவராக இருந்தனர்" (Pillai, 2009).

## முடிவுரை

இலக்கியம் மற்றும் வரலாற்று ஆவணங்களால் பழங்கால அரசு உருவாக்கங்கள் குறித்து அறியமுடிகிறது. ஆனாலும், பொதுவாக வரலாறு என்பது அரசை மையமாகக்கொண்டு எழுதப்படுகின்றதே தவிர சாமானிய மக்கள் பற்றியதாக இருப்பதில்லை. இந்நிலையில் ஒரு வரலாறெழுதியல் தன் பணியை முழுவதும் பூர்த்திசெய்வதில்லை. இப்போக்குகளை மாற்றுவதன் மூலமாக மட்டுமே ஒரு வரலாறெழுதியலின் நோக்கு முழுமையடையும் என்பதை இவ்வாய்வுக்கட்டுரை மெய்ப்பிக்கின்றது. இவ்வாறான வரலாறெழுதியலுக்கு நாயக்கர்கால மொழி, இலக்கிய, அரசியல், சமூக மற்றும் பண்பாட்டுச் சூழல்கள் மாதிரிகளாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இதன்வழி மேட்டுமை நோக்கியிருந்த வரலாற்றுப் புரிதல் சமதளத்தில் மக்கள் பற்றியதாகவும் அமைகிறது. நாயக்கர்களின் தாய்மொழியாகவும், அலுவல் மொழியாகவும் தமிழ் இல்லாமையால் முந்தைய நூற்றாண்டுகளில் இருந்ததைப்போல ஆட்சி மற்றும் நிருவாகப் பங்களிப்பைத் தமிழ்மொழியால் செலுத்திட இயலவில்லை. பிற நாட்டவரின் வருகையும் குடியேற்றங்களும் மொழிக்கலப்பிற்கு வித்திட்டன. பேரிலக்கிய மற்றும் பெருங்காப்பிய மரபின் தொடர்ச்சி இடைநின்றது. இன்ப நுகர்ச்சியாக இலக்கியங்கள் பார்க்கப்பட்டன. அதன் வெளிப்பாடே சிற்றிலக்கியங்களின் பெரும்வளர்ச்சி. பழைய இலக்கிய வடிவங்களில் நாட்டங்கொண்டவர்கள் அவற்றை உரையாக்கம் செய்வதில் முனைந்தனர். நாயக்கர்கால அரசியல் பெரும் போராட்டமாகவே இருந்தது. ஆயினும் சுல்தானியர்களின் வசம் தமிழகத்தை விட்டுக்கொடுக்கவில்லை. காலப்போக்கில் மராட்டியர்களிடமும், கருநாடக நாவாப்புகளிடமும் நிலங்களை இழக்க நேரிட்டது. சாதியப் பாகுபாடுகளால் மக்கள் பிளவுபட்டுக் கிடந்தனர். பல்வேறு கிளை சாதியக் குழுக்களும், குலங்களும் பெருகின. சமத்துவம் நிலவியதாக சான்றுகள் இல்லை. பூசல்களும் சச்சரவுகளும் மலிந்திருந்தன. இனத்திற்கு இனம் பண்பாட்டுக் கூறுகள் மாறியிருந்தன. மன்னர்களும் செல்வந்தர்களும் ஆடம்பர வாழ்கையை நுகர்ந்தவர்களாக அறியப்படுகிறார்கள். சாமானிய மக்கள் உழவையே தங்கள் ஆதாரமாகக்கொண்டு வாழ்ந்து வரலாயினர். இவ்வாறான முடிபுகளை நாயக்கர்கால வரலாற்றுப் பக்கங்களில் நிரப்பிட முடிகிறது.

## References

Arunachalam, Mu. (2005) Tamil Ilakkiya Varalaaru, Thamiziyal Aaivu matrum Veliyeettu Niruvanam, Chennai, India.

Chellam, V.T. (2017) Thamizhaga Varalaarum Panpaadum, Manivaasagar Padhippagam, Chennai, India.

Dhatchinaamoorthi, A. (2008) Thamizhar Naagarigamum Panpaadum, Yaazh Veliyeedu, Chennai, India.

Karthikesu Sivathambi, (2010) Thamizil Ilakkiya Varalaaru (Varalaarezuthiyal Aaivu), New Century Book House Pvt. ltd, Chennai, India.

Pillai, K.K. (2009) Thamizaga Varalaaru Makkalum Panpaadum, International Institute of Tamil Studies, Chennai, India.

Ramasamy A. (2009) Thamizhnaattu Varalaaru, New Century Book House, Channai, India.

Rasaram, S., Balasubramaniam, S., Padmanaban, N. (2014) Pudhiya Tamizh Ilakkiya Varalaru, Vol-2, Sahitya Academy, New Delhi, India.

Sethuraman, K. (2017) Thamizhaga Samudhaaya Panpaattu Kalai Varalaaru, New Century Book House Pvt, Chennai, India.

Sethuraman, S. (2017) Thamizh Ilakkiya Varalaaru, New Century Book House, Chennai, India.

Subramaniya Pillai, K, (2009) Ilakkiya Varalaru, Vpl-1, M Vetriyarasi Veliyeedu, Chennai, India.

Varadharasan, M. (2008) Tamizh Ilakkiya Varalaru, Sahitya Academy, New Delhi, India.

Victor, M.S. (2007) Thamizhum Samaskirudhamum, Vol-1, Nalloor Padhippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License